15.04.2026

அ.வ.எண். 383/2017

பி.சா.1 – திரு. செந்தில்குமார், த/பெ. பரமசிவம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 15.04.2026 is accordance with the provision of Act X of 3331

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ராமன கவுண்டர் மனைவி பெயர் ராமாத்தாள் ஆவார். ராமாத்தாள் எப்போது இறந்தார் என்று தெரியாது. ராமாத்தாளுக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. வாதியன் தாயாருக்கு திருமண சமயத்தில் சொத்து வழங்கப்பட்டதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் திருமண சமயத்தில் சொத்து கொடுக்கவில்லை அதன் பின்னிட்டு சொத்து கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தேவாத்தாளுக்கு எந்த பாகமும் கொடுக்கப்படாததால் தான் ராமன கவுண்டரின்பெயரில் உள்ள சொத்து இன்றுவரை அவரது பெயரிலேயே உள்ளது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி, தாவா சொத்திற்கான 3 கிணறுகள், மின் இணைப்புகள், மின் மோட்டார்கள், மின் உபகரணங்கள், பொது வழிநடை பாத்தியம் மற்றும் வாரி வாய்க்கால் அனைத்தும் இன்றுவரை பொதுவானதாகவே, ராமன கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி திருமணம் ஆகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் தாயார் தேவாத்தாள் திருமணத்திற்கு பின்னிட்டு அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். வாதியின் தாயார் மற்றும் 2 ம் பிரதிவாதி திருமணம் ஆகி அவரது கணவர் வீட்டில் வசித்து வந்ததால் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல, பணம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இடத்தை விற்று பணம் வழங்கப்பட்டுள்ளது, அதற்கான ஆவணம் தாக்ல செய்துள்ளேன்.

3. எனது அப்பாவும், வாதியின் அப்பாவும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். வழக்கு சொத்தை 1934 பாகப்பிரிவினை ஆவணத்திற்கு முன்பாக யார் கிரயம் பெற்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டும் நான் வாதியுடன் நல்ல உறவுமுறையில் இருந்து வந்தேன் என்றால் இல்லை. வாதியின் தாத்தா ராமன கவுண்டர், என் தாத்தா கருப்புசாமி மற்றும் 5ம் பிரதிவாதி மூவரும் வாதியின் தாயாருக்கு கூட்டு குடும்ப சொத்தில் இருந்து உரிய பாகம் ஒதுக்கி தருவதாக சொன்னார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை.

4. வாதியின் தாத்தா ராமன கவுண்டர், பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தில் இறந்துபோன தனது மகள் வாரிசுகளுக்கு கூட்டு குடும்ப சொத்தின் பாகத்தை ஒதுக்கிதர தயாராக இருந்தார் என்றும், அதை நான் மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமன கவுண்டர், வாரிசுகளுக்கு பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தில் சரிசமமாக பாகம் உள்ளது என்றால் ஏற்கனவே ஒரு பாகம் விற்று அதற்கான ஆவணம் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு பாகம் கொடுத்ததற்கான ஆவணம் மற்றும் பணம் கொடுத்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. ராமன கவுண்டரின் பெயரில் உள்ள தாவா சொத்துக்களுக்கு மோசடியாக வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய நாங்கள் முயற்சி செய்ததை வாதி தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. ராமன கவுண்டர் இறக்கும் சமயத்தில், 5ம் பிரதிவாதியை அழைத்து என் மகள் வாரிசுகளுக்கு உரிய பாகத்தை கொடுக்க வேண்டும் என சொன்னார் என்றால் சரியல்ல. ராமன கவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு, 2ம் பிரதிவாதி பத்மாவதி, மற்றும் 5ம் பிரதிவாதி பழனிச்சாமி ஆகியோரிடம் வாதி நேரில் சென்று தன் தாயாருக்கு உரிய பாகத்தை தனக்கும், தன் சகோதரிகளுக்கும் பிரித்து பாகம் செய்து தர வேண்டி கேட்டனர் என்றால் சரியல்ல.

6. 1, 2 மற்றும் 5 பிரதிவாதிகள், ராமன கவுண்டரின் வாக்கை ஒரு பொருட்டாக எடுத்துகொள்ளாமல் தாவா சொத்தில் பாகம் பிரித்து கொடுக்காததால்

வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தற்போது தான் வந்துள்ளது. முதலில் வரவில்லை. மேற்படி அறிவிப்பை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி மட்டுமே அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது. 02.02.2009 தேதியிட்ட தினமலர் நாளிதழில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது சம்மந்தமாக எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கப்பட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

7. இந்த வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களை பாராதீனம் செய்யக்கூடாது என சூலூர் காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி நில அபகரிப்பு தடுப்பு தனிப்பிரிவு அலுவலகத்தில் கொடுத்த புகார் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரயம் பெறவில்லை என்றும் ராமன கவுண்டரின், வாரிசு அடிப்படையில் அனுபவம்செய்து வருகிறோம் என்றால் சரிதான். ராமன கவுண்டரின் பெண் மக்களான தேவாத்தாளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

8. 1934 பாகப்பிரிவினை ஆவணத்திற்கு பின்னிட்டு, தாவா சொத்து குறித்து எந்தவித பாகப்பிரிவினை ஆவணமும் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் தெரியாது. மேற்கண்டவாறு ஆவணம் பதிவு செய்யப்படாத நிலையில் நாங்கள் எங்களுக்குள் ஏற்படுத்திகொண்டதாக சொல்லும் வாய்மொழி பாகப்பிரிவினை ஆனது வாதியின் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் சரிதான் என சாட்சியம் அளிக்கிறார்.

9. க.ச.எண்.616/1C க்கு, 3ம் நபரான கணபதி கவுண்டர் பெயரில் பட்டா மற்றும் RSR உள்ளது என்றால் இல்லை. க.ச.எண்.616/1C யை 5ம் பிரதிவாதி ரகுபதி என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. ராமன கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு ஏற்படுத்திய ஆவணங்கள் அனைத்தும் சட்டத்திற்கு

புறம்பானது என்றால் சரியல்ல.  அதில் ராமன கவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வைக்கவில்லை என்றால் தெரியாது. பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தில், ஒரு வாரிசு கையெழுத்து செய்யவில்லை என்றாலும் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.  வழக்கறிஞரிடம் கொடுத்த ஆவணத்தில், ராமன கவுண்டர் இரு மகன்களான கருப்புசாமி மற்றும் 5 ம் பிரதிவாதி பழனிச்சாமிக்கு மட்டுமே மீதமுள்ள சொத்துக்கள் பாத்தியம் என சொல்லியுள்ளார்.  பி.சா.ஆ.7 பொது அதிகார ஆவணத்தில், செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றும், அதில் கூட்டு குடும்ப சொத்து என உள்ளது என்றால் தெரியாது.

10. எனது பிரமாண வாக்குமூலத்தில், வாதியின் தாயார் தேவாத்தாள், 1981 ல் இறந்ததாக பத்தி 3 ல் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். தேவாத்தாள் 15.01.1985 ல் இறந்தார் என்றால் தெரியாது.  பி.சா.ஆ.7 ஆவணம் மூலமாக க.ச.எண்.616/1, 2, 3, 4, 5 மற்றும் க.ச.எண்.617/1, 617/2 சொத்துக்களுக்கு பவர் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி பவர் ஆவணம் பி.சா.ஆ.7 பொது அதிகார ஆவணம் குறித்து வில்லங்க சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது.

11. ராமன கவுண்டர் அவரது ஆண் வாரிசுக்கு மட்டும் சொத்து கொடுக்க வேண்டும் என வாய்மொழியாக சொன்னதாக சொல்வது தவறு என்றும், அதற்குரிய எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ராமன கவுண்டருக்கு வாதியின் தாயார் தேவாத்தாள், கருப்புசாமி மற்றும் 5 ம் பிரதிவாதி பழனிச்சாமி ஆகிய மூவரும் வாரிசுகள் என்றும், அவரது மனைவி ராமாத்தாளும் ஒரு வாரிசு என்றும் சொன்னால் சரிதான். ஆகவே வாரிசுபடி, வாதியின் தாயாருக்கு ஒதுக்க வேண்டிய சொத்தில், உரிய பாகத்தை நலந்திகண்டு பிரித்து தர வேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**10 முதல் 12 மற்றும் 20 முதல் 22 மற்றும் 26 முதல் 29 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur